திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற வர்த்தகப் பெருங்குடி மக்கள் அங்கே இருக்கின்ற தனியார் நிறுவனங்கள் அந்த தொழில்நுட்பக் கல்வியை துவங்குகின்றபோது, அரசு அதற்கு ஆதரவு அளித்து அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய தொழிற் பயிற்சிப் பள்ளி துவங்க முன்வந்தால், புரட்சித் தலைவியினுடைய அரசு அனுமதி வழங்கும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 214, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

214—

புங்கங்குழி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தல்.

*10346—டாக்டர் சு. மணிமேகலை :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியம் கட்டுநாடுப் பகுதியிலுள்ள 'புங்கங்குழி' ஊராட்சியில் ஓர் கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் ஒன்றியம் கட்டுநாடுப் பகுதியிலுள்ள புங்கங்குழி ஊராட்சியில் கால் நடை மருந்தகம் அமைக்க செயற்குறிப்பு தற்போது நிலுவையில் இல்லை. வரும் ஆண்டுகளில் இதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில், கால்நடை மருந்தகம் மேற்கண்ட கிராமத்தில் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுநாடுப் பகுதி என்று அழைக்கப்படும் அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. ஏழை மக்களை அதிகமாகக் கொண்ட பகுதி. கால்நடையை நம்பி வாழும் பகுதி. அது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் சிலை திறப்பு விழாவிற்கு வந்து கலந்து கொண்டு அங்கேயுள்ள மக்களின் நலனைக் கண்டறிந்து வந்தார்கள். ஆகவே, அவர்களின் நலனைக் கருதி யூனியன் அளவில் ரெசலூஷன் போட்டு

அனுப்பப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அமைச்சர் அவர்களிடம் நானும் கேட்டு வந்துள்ளேன். ஆகவே, இந்த ஆண்டில் 400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதிலாவது எங்களுடைய பகுதியை சேர்ந்த புங்கங்குழி கிராமத்தை உள்ளடக்கி அதில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கிராமம் எனக்கு நன்கு தெரியும். அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மிக அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அந்த கால்நடைகளின் நலத்தை கருத்திற்கொண்டு அந்த கால்நடைகளுக்கு சிகிச்சை தருகிற வகையில் புதிய திட்டத்தை வருகிற மானியக் கோரிக்கையில் அறிவிக்க இருக்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டில் கருத்தில் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியின் நலம் கருதி, அட்லீஸ்ட் பீரியாடிக்கலி ஒரு மொபைல் யூனிட்டாவது வருகிற அளவுக்கு ஏற்பாடு செய்து அங்கேயுள்ள மக்களின் நலனில் அக்கறை கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதம் 22ஆம் தேதி வரையில் சற்று பொறுத்திருக்க வேண்டுமாய் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 215, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

215—

இருபது ஹெக்டர் அரசு விதைப் பண்ணைக்கு உதவி வேளாண்மை இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர் நியமித்தல்.

*11779—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

20 ஹெக்டர் அரசு விதைப் பண்ணைக்கு இரு வேளாண்மை அலுவலர் இருப்பதை மாற்றி ஒரு உதவி வேளாண்மை இயக்குனர் ஒரு வேளாண்மை அலுவலர் என்று பணி அமர்த்திச் செயல்பட அரசு ஆவன செய்யுமா ?